20th March 1964]

(*d*) whether the location of a site for the establishment of the new factory for Heavy Constructon and Mining Equipments has been finalised;

(*e*) whether a representation, dated 2nd August 1963, submitted by one R. Venkatasubba Reddy requesting to investigate a site near Kallakurichi Co-operative Sugar Mills for the location of the above factory has been received by the Government; and

(*f*) if so, the action taken by the Government thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) *to* (*c*) A statement[a] is placed on the Table of the House.

(*d*) *to* (*f*) The representation from Sri R. Venkatasubba Reddy has been received. The Government of India have decided to locate the new project for the manufacture of heavy duty trucks and earth moving equipments in Kolar district, Mysore State;

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே சிவகங்கையிலே ஒருவகை களிமண் கிடைப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் களிமண்ணை பயன்படுத்தி சில வகைக் குழாய்கள் செய்யப்படுவதாகவும் அத்தகைய ஒரு தொழிற்சாலை மானாமதுரையில் அமைக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அது போன்ற ஒரு தொழிற்சாலையை சிவகங்கையிலும் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதிலே ஒரு பெரிய லிஸ்டே கொடுத்திருக்கிறோம். இதைப்பற்றித் தனி தனியாக விவரம்வேண்டுமானால் தனித் தனியாக கேள்வி போட்டால் அதைப்பற்றி சொல்லமுடியும்.

நாமக்கல் நகர பஞ்சாயத்தை நகராட்சியாக்குதல்

* 340 கேள்வி.—**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா :

சேலம் மாவட்டம், நாமக்கல் நகர ஊராட்சியை (Town Panchayat) நகராட்சியாக (Municipality) உயர்த்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI S. M. A. MAJID : The matter is under consideration.

இவ்விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். வி. கரிவேங்கடம் : ஒரு சில பஞ்சாயத்துக்களை முனிசிபாலிடிகளாக மாற்ற அரசாங்கம் நோடிபிகேஷன் செய்தது. ஃபைனல் நோடிபிகேஷன் எப்போது செய்யப்படும் ? அந்தப் பஞ்சாயத்துக்களை முனிசிபாலிடிகளாக மாற்றி எப்போது ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமிக்கப் படுவார்கள் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 1964-ம் வருஷம் எப்ரல் மாதம் 1-ந் தேதி அமலுக்கு வரும். ஸ்பெஷல் ஆபீசர்களும் நியமிக்கப்படுவார்கள்.

திரு. முனு ஆதி : பஞ்சாயத்துக்களை நகர மன்றங்களாக மாற்றியதற்குப் பின்னால் தேர்தல் நடத்த எத்தனை மாதங்கள் அல்லது எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கொஞ்ச நாள் வரைக்கும் ஸ்பெஷல் ஆபீசர்கள் மேற்பார்த்து வருவார்கள். பஞ்சாயத்துக்கள் நகர மன்றங்களாக மாற்றப்படும்போது வேறு வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள். தேர்தல் நடத்துவதற்கு தகுந்த சமயம் ஏற்பட்ட உடனே நடத்தப்படும்.

---

[a] Printed as Appendix II on pages 428–455.

[20th March 1964

திரு. ஜே. மாதா கவுடர் : ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வரும்படி வரக்கூடிய பஞ்சாயத்துக்கள் எல்லாம் பெரிய பஞ்சாயத்துக்கள் என்று செய்யப்பட்ட முடிவு முன்பு எடுத்த முடிவாகும். இப்போது ஒரு லட்சம் ரூபாய் வருமானமுள்ள ஒரு பஞ்சாயத்து முனிசிபாலிடியாக ஆகிவிட்டால், 40,000 ரூபாய்க்கு மேல் சம்பளமாகவே போய்விடும். ஆகவே, மூன்று லட்ச ரூபாய்க்கு குறைவாக உள்ள பஞ்சாயத்துக்களை முனிசிபாலிடிகளாக மாற்றாமல் இருப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே நடைமுறையில் விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாறுதல் வேண்டுமென்றால் அரசாங்கத்தின் பரிசீலனைக்குக் கொண்டு வரலாம்.

தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் சுவடிகள்

***341** கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூலகத்திலுள்ள பழைய ஏட்டுச் சுவடிகளைப் பார்வையிட, ஆயுர்வேத ஆராய்ச்சியின் மத்தியக் கவுன்சில் இந்த அரசாங்கத்தின் உதவிகளைக் கோரியுள்ளதா ?

(இ) அப்படியானால், அனுமதி வழங்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்திலுள்ள ஏட்டுச் சுவடிகளைப் பார்வையிட, ஆயுர்வேத ஆராய்ச்சி மத்தியக் கவுன்சில் இந்த அரசாங்கத்தின் உதவியைக் கோரவில்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

புலவர் கா. கோவிந்தன்: அந்த நூல் நிலையத்திலே இருக்கிற நூல்களில் தங்களுக்கும் உரிமையுண்டு என்று ஆந்திர அரசாங்கம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறதா ? அதன் பேரில் அரசாங்கம் ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்ததைவிட அதிகம் எனக்கு ஒன்றும் தெரியாது.

திரு. செ. மாதவன் : தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல்நிலயத்தைப் பற்றி வேறு மாநில அரசாங்கத்திற்கும் நம்முடைய அரசாங்கத்திற்கும் ஏதாவது கடிதப் போக்குவரத்து இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கடிதப் போக்குவரத்து ஏதேனும் இருக்கலாம். என்னிடம் விவரம் இல்லை. எத்தனையோ மாநிலங்களில் உள்ள நூலகங்களுடன் கடிதப் போக்குவரத்துக்கள் இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக விவரம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தஞ்சை சரஸ்வதி மகாலில் இருக்கிற பழைய ஏட்டுச் சுவடிகளைக் காபபாற்றுகின்ற வகையில் மட்டுமே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா ? அல்லது நாடு எங்கும் இருக்கிற பழைய ஏட்டுச் சுவடிகளை எல்லாம் திரட்டி விரிவுப்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வெளியில் இருந்து கொண்டு வருவது என்பதில்லை. ஏற்கனவே இருக்கக் கூடிய ஏட்டுச் சுவடிகளைப் பாதுகாப்பதோடு பல அரிய பிரசுரங்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.